990 990

Reg. No. M. 1354.

போதன விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.

OFFICE OF THE ...
16 DEC 1940
MADRAS

கொத்து 31

மலர் 5

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 நவம்பர் 1940

...முறை பாடசாலை, திருச்சிறுப்பள்ளி.

...1. தனிப்பிரதி அணு 1½.

JL.
ஜைபட, N1PP
N40 31·5
182466

BODHANA VISHAYA POONGOTHU

Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள் ...	... 129
2.	சென்னை கல்வி இலாகா திருத்த விதிகள்	... 132
3.	யோசனுவிருத்திச் செய்யுள் ...	... 133
4.	ஆரம்ப இலக்கணம்	... 134
5.	பாடக் குறிப்பு	... 138
6.	நமது சிறுவர்களின் சுகாதாரம் ...	... 141
7.	உலகம் போகிற போக்கு ...	... 145
8.	இந்நாளே எம் நன்னுள்	... 147
9.	எமது உல்லாசப் பிரயாணம் ...	... 149
10.	நூல் நூற்றல்	... 151
11.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள் ...	... 152
12.	திருச்சினுப்பள்ளி ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்	155
13.	நடுவெழுத்தலங்காரம் விடை ...	... 157
14.	பாலர் ஸங்கிதம்	... 158

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

தேவை! ஏஜெண்டுகள் தேவை!

எமது "போதனுவிஷயப் பூங்கோத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணு ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,
போதனுவிஷயப் பூங்கோத்து,
R. C. போதனுமுறைப் பாடசாலை, திருச்சி.

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 31] **15** நவம்பர் **1940** [மலர் 5

பத்திராதிபர் குறிப்புகள்

பாடசாலை தினக் கொண்டாட்டம் (School Day Celebrations) : எமது பாடசாலை தினக் கொண்டாட்டங்கள் வெகு விமரிசையுடன் நேர்த்தியாய் சித்திபெற்றதற்கு எமது நன்றியும் ஸ்தோத்திரமும் முதன்முதலில் கடவுளுக்கு உரிமையாகும்.

இச்சந்தர்ப்பத்தில் நடைபெற்ற பரிசளிப்பு, நாடகங்கள் முதலிய வைபவங்களுக்கு அக்கிராசனம் வகித்த ஜில்லா கல்வித் தலைவர் (D. E. O.) ஸ்ரீ ரெகுநாதன் B.A., L.T., T.D. (Lond.) M. R. S. T., அவர்கள் தமது அரிய சொற்பொழிவுக்கிடையில் நமது போதனாவிஷயப் பூங்கொத்து தமிழ் நாட்டில் ஆரம்பப் பாடசாலைகளுக்காகப் புரிந்துவரும் அரிய சேவையைப் புகழ்ந்து, ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியரும் ஷை பத்திரிகையைப் படித்துப் பயன் எய்தவேண்டுமெனத் தாம் பெரிதும் விரும்புவதாகத் தெரிவித்துக்கொண்டனர்.

இங்ஙனம் நமது பாடசாலையின் அபிவிருத்தியையும், பூங்கொத்தின் முன்னேற்றத்தையும் கோரிவருகின்ற நமது ஜில்லா கல்வித் தலைவருக்கு ஏமது மனமார்ந்த நன்றியை இச்சந்தர்ப்பத்தில் செலுத்துகின்றோம்.

எமது போதனுவிஷயப் பூங்கொத்து நம் தமிழ்நாட்டின் கண் உள்ள ஆரம்பப் பாடசாலை உபாத்திமார்களுக்கு சேவை புரியும் ஓர் பத்திரிகை என்பது வெளிப்படை. அன்னவருக்குத் தங்கள் தொழிலை சரிவர நிறைவேற்றுவதற்கு உதவியாயுள்ள கஜெட் பிரசுரங்கள், அரசாங்க சுற்றறிக்கைகள், பாடக் குறிப்புகள், ஆரம்பக்கல்வி சம்பந்தமான வியாசங்கள் முதலியன பிரசுரித்துக் கொண்டிருக்கிறோம். புதிய பாடத் திட்டத்தை அநுசரித்து சில புதிய கட்டுரைகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் கைத்தொழில் அல்லது கைவேலைப் பகுதியுமாகும். இந்த நவீன கட்டுரைகளுக்கு பூங்கொத்தில் இடம் போதாமையால், 24 பக்கங்களிலிருந்து 32 பக்கங்களாக இப்பொழுது அதிகரித்திருக்கிறோம்.

மேலும் நமது பூங்கொத்து சென்ற ஒரு வருடத்திற்குள் இரு மடங்கு சந்தாதாரரை அடைந்துள்ளது உண்மையே. இது ஆரம்ப ஆசிரியரால் வெகுவாய் விரும்பப்படுகிறதென்று சொல்லாமலே விளங்கும். இன்னும் இதில் தோன்றும் கட்டுரைகளைப்பற்றியோ, அல்லது தேவையான வேறு விஷயங்களைப் பற்றியோ, நேயர்கள் எமக்குத் தெரிவித்தால், அவர்களுடைய அபிப்பிராயங்கள் கவனிக்கப்படும்.

நமது பூங்கொத்து நேயர்களும் அதன் பயனைத் தம்மோடு இன்னும் பலரும் அடையுமாறு நம்மோடு ஒத்துழைப்பார்களாக. அன்றியும் அதன் முன்னேற்றத்தைக் கருதி புது சந்தாதாரர்களைச் சேர்க்கவும், விஷயதானம் புரியவும் முன் வருவார்களாக.

* * * *

விஷயதானம் புரிய விரும்புவோர், நமது பத்திரிகை விஷய அட்டவணைகளில் காண்பன போன்று, பொருத்தமான விஷயங்களை முன் மாதம் 20-ம் தேதிக்குள் அனுப்பிவிடக் கடவர். நமது பத்திரிகை பிரதிமாதமும் 15-ம் தேதியன்று பிரசுர

182466

மாகின்றமையின், நிருபர்கள் தமது நிருபங்களை Book Post மூலம் மேலே கூறியுள்ளபடி அனுப்பிவிடுவது சாலப்பொருத்த மாகும்.

* * * *

ஷை பாடசாலை தின "பரிசளிப்பு" சமயத்தில் நாம் ஏற்கனவே செப்டம்பர் மாதத்திய பூங்கொத்தில் அறிவித்தபடி சென்ற T. S. L. C. பரீட்சையில் முதன்மையான மார்க்குகள் வாங்கின செக்கண்டரி கிரேடு மாணவர் திரு. K. வடிவேலு, ஹையர் எலிமெண்டரி கிரேடு மாணவர் திரு. A. J. ஜோசப் ஆகிய இருவருக்கும் பொன் பொறித்த வெள்ளிப் பதக்கப் பரிசு D. E. O. அவர்களால் நேரில் அன்னவர்க்கு அளிக்கப் பட்டது. மேலும் செக்கண்டரி கிரேடு பரீக்ஷையில் இரண்டாவதாக (2nd in Rank) தேர்ந்த மைக்கில் ஞானதுரைக்கும் எமது பந்தய விளையாட்டில் பொதுவில் தேர்ச்சிபெற்ற (Champion) P. லாசர் என்பவருக்கும் பதக்கங்களளிக்கப் பட்டன.

இவ்வாறு பதக்கப் பரிசு அளித்தல் ஏற்பாடு எமது பாடசாலைச் சரிதையில் இதுவே முதற்தடவையாகும். இங்ஙனம் பரிசுபெற்றுக்கொண்ட மாணவர்க்கும் எமது மனமார்ந்த வாழ்த்துதலைக் கூறுகின்றோம்.

நீதிபதி :—உன்னை எத்தனை தடவை விசாரித்துத் தண்டிக்கிறது? அடிக்கடி இந்த கோர்ட்டுக்கு வர உனக்கு வெட்கமில்லையா?

குற்றவாளி :—நான் தங்களைப்போல் நாள்தோறும் வருவதில்லையே!

M. Visvasam, *S. 1.*

சென்னை கல்வி இலாகா திருத்தவிதிகள்

Proceedings of the D. P. I. R. C. No. 3748, B/39 dated 2-10-1940.

கல்வி டைரெக்டரது ஷை சுற்றறிக்கையின்படி, நகரங்களிலும் கிராமங்களிலும் ஜனஸங்கியை கணக்கு (census) எடுப்பதற்காகவும், பள்ளியில் படிக்கும் வயது வந்துள்ள பிள்ளைகளின் கணக்கு எடுப்பதற்காகவும் பாடசாலைகளை மூடும் நாட்களை வேலைசெய்யும் நாட்களாக (working days) பாவித்துக் கொள்ளலாம். ஆனால் ஷை கணக்குகள் எடுப்பதைப்பற்றி ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) அல்லது இன்ஸ்பெக்ட்ரெஸ் ஏற்கனவே அனுமதி கொடுத்திருக்கவேண்டும்.

Proceedings of the D. P. I. Dis. No. 4634—40: dated 4-10-1940.

ஆரம்பப் பாடசாலைகளுக்கு அங்கீகாரம் வாங்கவும் திரவிய சகாயம் (grant) பெறவும், கல்விச்சட்டத்தின் 17-வது விதியில் கண்டுள்ள தேதிக்குள் மனுக்கள் போடவேண்டும். ஆனால் அந்த குறிப்பிட்ட தேதிக்குப்பிறகு தாமதித்து மனு செய்து கொண்டால், மூன்றுமாதகாலத்திற்கு மேற்படாமல் இருக்கும் பட்சத்தில் ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) ஆண் பாடசாலைகள்மட்டிலும், இன்ஸ்பெக்ட்ரெஸ் பெண் பாடசாலைகள்மட்டிலும் அவ்வித மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம்.

ஷை மூன்று மாதங்களுக்கு மேற்பட்டுப்போகும் மனுக்கள் விஷயமாய் ஆண்பாடசாலைகள் சம்பந்தமாய் "டிவிஷனல் இன்ஸ்பெக்டர்" (Divisional Inspector) பெண்பாடசாலைகள் சம்பந்தமாய் இன்ஸ்பெக்ட்ரெஸ் இவர்களுடைய அனுமதியின்றி ஷை திரவிய சகாயத்திற்கான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Proceedings of the D. P. I. Dis. No. 4662—40 dated 5-10-1940.

தற்போது எல்லா ஆரம்பப் பாடசாலைகளிலும் "ரிக்கார்டு ஷீட்" (Record Sheet) வைக்கப்பட்டிருக்கிறபடியால், இதுவரை எலிமெண்டரி பாடசாலைத் தலைமை ஆசிரியர்களால்

கொடுக்கப்பட்டு வரும் "லீவிங் ஸர்ட்டிபிக்கேட்" (Leaving certificate) இனிமேலாகத் தேவை இல்லை.

ஆகவே டைரெக்டரது இந்த புது உத்தரவின்படி, ஷெ விஷயமான பழைய உத்தரவுகளெல்லாம் ரத்தாகிவிட்டன. எல்லாவிதமான ஆரம்பப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் இனிமேலாக E. S. L. C. எலிமெண்டரி ஸ்கூல் லீவிங் ஸர்ட்டிபிக்கேட்டுகள் வழங்கும் வழக்கத்தை நிறுத்திவிட உத்தரவிடப் பட்டிருக்கின்றனர்

யோசனை விருத்தி செய்யுள்

M. Visuvasam, *Secondary Grade, (Junior).*

நான்கெழுத்தா லானதொரு தமிழினிய பதமதனைத்
தரணியில் தலையான பாவங்களுள் ஒன்றென்பர்
நான்கெழுத்தில் ஆதியை அகற்றி நோக்கின்
தரித்திரர் தரித்திடும் பீறல் என்பனர்
நான்கெழுத்தில் தலையும்கடையயலும் நீக்கின்
பாட்டிமார் கூறும் சரிதம் என்னும் பதமாம்
நான்கெழுத்தில் கடைமட்டும் பார்க்கின் தக்கதோர்
தமிழ் மாதமதைப் பாடலினால் புகலுவீரே.

* * *

உயர்ந்தோர் உபதேசம்

1. எழுத்தறியாதான் வாழ்க்கை ஏதுங் கெட்ட வாழ்க்கை.
நட்பினரில்லாதான் வாழ்க்கை நாலுங்கெட்ட வாழ்க்கை.
புத்திரனில்லாதான் வீடுபுக அஞ்சுவதோர் காடு.
பொருளில்லாதவனுக்கு நாடு புகைக்குள்மடிப்பதோர் காடு.

2. துஷ்டனுக்கு ராஜாங்கமே பலம்.
குழந்தைகளுக்கு அழுகையே பலம்.
முட்டாளுக்கு மௌனமே பலம்.
கள்வனுக்குப் பொய்யே பலம்.

ஆரம்ப—இலக்கணம்

ஆசிரியர், எம். எஸ். சுந்தரேச அய்யர், திண்டிவனம்.

"க ச த ப" இயல்பாக நிற்குமிடங்கள்

க, ச, ட, த, ப, ற என்ற ஆறு வல்லெழுத்துக்களில் க ச த ப என்ற நான்கு எழுத்துக்களுமே மொழிக்கு முதலில் வரும். மற்ற இரண்டும் வருவதில்லை. ஆகையினால் இரட்டிக்கும் எழுத்துக்கள் இந்நான்கேயாம். சந்தி எழுத்துக்கள் என்றாலும், ஒற்றெழுத்துக்களென்றாலும் க, ச, த, ப ஆகிய நான்கையுமே கொள்ளவேண்டும். இவைகள் எவ்வெவ்விடங்களில் இரட்டிக்கும், எவ்வெவ்விடங்களில் இரட்டிக்கா என்பதை விளக்குவதற்குக் கீழே வரும் விதிகள் மிகவும் பயன்படுவனவாகும்.

முதற் பகுதி

சந்தி எழுத்துக்கள் மிகா இடங்கள்.

1. எழுவாய்த் தொடர்

தமிழில் ஒரு எழுவாயும் பயனிலையும் சேர்ந்து வரும் வாக்கியத்திற்கு எழுவாய்த் தொடரென்று பெயர். உதாரணம் :— மலை நிற்கிறது; மீன் நீந்துகிறது; அவன் வந்தான் முதலியன எழுவாய்த் தொடர்களாம். இவ் வாக்கியங்களில் சந்தி எழுத்துக்கள் வருவதற்கு இடமில்லை. சந்தி எழுத்துக்கள் வரும் தொடர்களையே கவனிக்கவேண்டும். உதாரணம் :—

"க்" வரவில்லை

(1) பூனை கத்துகிறது.
(2) நாய் குரைக்கிறது.
(3) கோழி கூவிற்று.
(4) பாம்பு கடித்தது
(5) சோறு கொதிக்கிறது.
(6) பசி கொடியது.
(7) குதிரை கனைக்கிறது.
(8) குரங்கு கௌவிற்று.
(9) தந்தை கேட்டார்.
(10) அன்னை கோபித்தாள்... முதலியன.

"ச்" வரவில்லை

(1) தம்பி சென்றான்.
(2) யானை செத்தது.
(3) மழை சொரிந்தது.
(4) பிதா சொன்னார்.
(5) தங்கை சிரித்தாள்.
(6) நாடு செழித்தது.
(7) நாற்காலி சாய்ந்தது.
(8) பானை சுட்டது...... முதலியன.

"த்" வரவில்லை

(1) எருது தாண்டிற்று. (3) குழந்தை தவழ்ந்தது.
(2) மாதா தேடினாள். (4) கொடி தொங்குகிறது... முதலியன.

"ப்" வரவில்லை

(1) புலி பாய்ந்தது. (2) காந்தி பேசினார்...முதலியன.

இம்மாதிரிப் பல எழுவாய்த் தொடர்களைக் க, ச, த, ப எழுத்துக்கள் முறையே வருமாறு மாணவரிடமிருந்து வரவழைத்தல்.

2. மூன்றும் வேற்றுமைக்குப் பின்

இலக்கணத்தில் ஓடு, ஒடு, ஆல், ஆன், உடன், கொண்டு முதலியன மூன்றும் வேற்றுமையைத் தெரிவிக்கும். இவைகளில் ஓடு, ஒடு ஆகிய உருபுகளையே இங்குக் கொள்ளவேண்டும். மற்ற உருபுகள் சந்தி எழுத்துக்களுக்கு இடம் கொடுப்பதில்லை. உதாரணம் வரவழைக்கும்போது, முறையே "க ச த ப" வருவதைக் கவனிக்கவேண்டும். உதாரணம்:

(1) மகனோடு கிழவர் வந்தார்......க் வரவில்லை.
(2) அவரோடு சொன்னையா?......ச் வரவில்லை.
(3) பாலோடு தேன் கலந்தான்......த் வரவில்லை.
(4) சுவாமியாரோடு பையன் போனான்......ப் வரவில்லை.

'ஒடு' உருபிற்கும் இவ்வாறே உதாரணம் வரவழைத்துக் கொள்ளலாம்.

3. ஆறும் வேற்றுமைக்குப் பின்

ஆறும் வேற்றுமையைக் காட்டுவது உடைய, அது, ஆது, அ முதலிய உருபுகளாம். அகர உருபும் ஆது உருபும் செய்யுட்களில் வரும். அது, உடைய என்ற உருபுகளே இங்குக் கொள்ளப்படுகின்றன. உதாரணம்:

(1) பசுவினது கன்று. (3) எனது தொழில்.
(2) கதவினது சாவி. (4) தமிழரது பாஷை...

உடைய என்ற உருபிற்கும் முறையே உதாரணம் வரவழைத்துக்கொள்ளவும். சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் பாடப் புத்தகத்திலிருந்து பல உதாரணங்கள் காட்டலாம்.

4. விளி வேற்றுமைக்குப் பின்

விளி வேற்றுமை=எட்டாம் வேற்றுமை. (விளித்தல்=கூப்பிடுதல்) தன்மையிலுள்ள முதல் வேற்றுமைச் சொற்களே,

விளிக்கப்படும்போது எட்டாம் வேற்றுமையாகி முன்னிலைச் சொற்களாக மாறும். இவ்வுண்மையை மாணவர்களுக்கு வற்புறுத்திக் கூறவேண்டியது. உதாரணம் :—

(1) குழந்தாய் கேள். (3) அம்மா தா.
(2) வீரா சொல். (4) அண்ணா போ.

(இவற்றுள் குழந்தை, வீரன், அம்மை, அண்ணன் என்ற சொற்கள் விளித்தற் பொருளில் வந்திருப்பதைக் கவனிக்கவும்.)

5. அகரவீற்றுப் பெயரேச்சத்திற்குப் பின்

பெயரைக்கொண்டு முடியும் சொற்களுக்குப் பெயரெச்சம் என்று பெயர், (எச்சம்=குறைவு) உதாரணம் :—

(1) அழுகிற குழந்தை; அழுத குழந்தை.
(2) ஓடுகிற சிறுவன்; ஓடிய சிறுவன்.
(3) செய்கிற தொழில்; செய்த தொழில்.

6. வட சொற்றொடரில்

தமிழ்ப்பாஷையில் ஏராளமான வட சொற்கள் கலந்திருக்கின்றன. இரண்டு வட சொற்கள் சேர்ந்து வருமாயின் அது வட சொற்றொடராம். இச் சொற்களுக்கு மத்தியில் சந்தி எழுத்துக்கள் வாரா. உதாரணம் :—

(1) பூ கோளம். (5) அஷ்ட திக்கு.
(2) கஷ்ட காலம். (6) புண்ணிய தேசம்.
(3) பிதா சுதன். (7) பின்ன பத்திரம்.
(4) துக்க சாகரம். (8) பஞ்ச பாண்டவர்.

7. உம்மைத் தொகையில்

இரண்டு சொற்களைச் சேர்க்கும்பொழுது மத்தியில் "உம்" என்ற இடைச்சொல் மறைந்துவரும், இவ்வாறு மறைந்துவரும் தொடர்களுக்கே உம்மைத் தொகை என்று பெயர்.

உதாரணம் :—

(1) காய் கறி. (7) மேள தாளம்.
(2) கை கால். (8) நன்மை தீமை.
(3) செடி கொடி. (9) தாய் தந்தை.
(4) சேர சோழர். (10) மேடு பள்ளம்.
(5) பானை சட்டி. (11) இரவு பகல்.
(6) சொறி சிரங்கு. (12) சதி பதி.

8. எண்ணுப்பெயர்களுக்குப் பின்

எட்டு, பத்து என்ற எண்களைத்தவிர மற்ற எண்களுக்குப் பின் சந்தி எழுத்துக்கள் வரா. இவ்வெண்ணுப் பெயர்கள் ஒரு, இரு, அறு, எழு என்று விகாரப்பட்டும் வரும். உதாரணம் :—

(1) ஒரு கதை, ஒரு செடி, ஒரு தெய்வம், ஒரு பசு......
(2) இரு குதிரைகள், சிறுத்தைகள், திருடர்கள், பறவைகள், மற்றவைகளுக்கும் இவ்வாறே உதாரணம் கண்டுகொள்க.

9. இரண்டாம் வேற்றுமைத் தொகையில்

சில இடங்களில் இரண்டாம் வேற்றுமையின் உருபாகிய “ஐ” தொக்கிவரும். இதுவே இரண்டாம் வேற்றுமைத் தொகையாம். உதாரணம் :—

(1) தமிழ் கற்றான் ; கூழ் குடித்தான்.
(2) பெட்டி செய்தான் ; கதை சொன்னான்.
(3) குழி தோண்டினான் ; துணி தைத்தான்.
(4) மலர் பறித்தான் ; குடை பிடித்தான்.

10. வினைத் தொகை

பெயரெச்சமானது காலத்தை வெளிப்படையாகக் காட்டாது நிற்குமானால் அது வினைத்தொகையாம். இந்த வினைத் தொகையானது முக்காலத்திலும் பொருள் கொள்ளக்கிடக்கும். உதாரணம் :—(செய் தவம்—இது வினைத்தொகை ; செய்த தவம், செய்கின்ற தவம், செய்யும் தவம் என இது விரியும்).

(1) நனை கூரை ; நிறை குடம் ; சுடு காடு.
(2) இடி சுவர் ; எய் சரம் ; அரி சினம்.
(3) தரு துயரம் ; நெய் தொழில் ; உறு தீ.
(4) அழி பொருள் ; விளை பொருள் ; வரு புனல்.

11. வன்றொடரல்லாதன

குற்றியலுகரம் போதித்தபின்னர் இதை நடத்தவேண்டும். வன்றொடரில் சந்தி எழுத்துக்கள் மிகும். வன்றொடரல்லாதவைகளில் பெரும்பாலும் மிகா. உதாரணம் :—

(1) என்று கேட்டான். (3) மென்று தின்றான்.
(2) உணர்ந்து சொன்னான். (4) வந்து போனான்.

12. பல, சில, சிறு, படி, தனை என்பவைகளுக்குப் பின்னர்

உதாரணம் :—

(1) பல காவலர். (4) சொற்படி செய்.
(2) சில செடிகள். (5) எத்தனை தூரம்...முதலியனவாம்.
(3) சிறு தொழில்.

(தொடரும்.)

பாடக் குறிப்பு

(R. Pitchai Pillai.)

வகுப்பு : V. நேரம் : 40 நிமிஷம்.

பாடம் : இயற்கைப்பாடம்.

நோக்கம் : சூரிய வெளிச்சத்தைப் பெற இலைகள் செய்து கொள்ளும் ஏற்பாடுகள்.

உபகரணம் : அலரி, ஆல், அரசு, சோளம், கம்பு, வெண்டை, எருக்கு, அகத்தி, ஆமணக்கு, அவரை, வேம்பு, வாதாமடக்கி முதலிய தாவரங்களின் கொப்புகள். வாழை இலை.

பீடிகை : தாவரங்கள் ஜீவிப்பதற்கு தண்ணீர், காற்று, சூரிய உஷ்ணம் தேவை என்னும் விஷயத்தை, பிள்ளைகளோடு சம்பாஷித்து நிர்ணயித்துக்கொள்ளவும். பிறகு, சூரிய உஷ்ணத்தைப் பெறுவதில் இலைகள் அதிகம் பங்கெடுத்துக்கொள்ளுகின்றன என்பதை வரவழைத்து, நோக்கத்தை வெளியிட்டுப் பாடத்தை ஆரம்பிக்கவும்.

விஷயம்	முறை
சூரிய வெளிச்சத்தைப் போதுமான அளவு பெற்றுக்கொள்வதற்கு :—	
1. இலைகள் பெரியவைகளாயும், சிறியவைகளாயும், வெவ்வேறு இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.	உபகரணங்களைக் கொண்டு, ஒவ்வொன்றிலும் பெரிய இலைகளும், சிறிய இலைகளும், பற்பல இடங்களில் ஒன்றை ஒன்று மறைக்காமல் அமைந்திருப்பதைக் காட்டி விளக்கவும்.
2. இலைகளில் சில ஈட்டி வடிவமுள்ளவைகளாயும், சில இருதய வடிவமுள்ளவைகளாயும், வேறு சில முட்டை வடிவமுள்ளவைகளாயும் இருக்கின்றன.	அலரி, அரசு, ஆல் முதலியவற்றின் கொப்புகளைக் காட்டி விளக்கவும்.

விஷயம்	முறை
3. சில இலைகள் வெகு நீளமாகவும் பக்கங்களில் அதிக தூரம் பரவக்கூடியவைகளாயுமிருக்கின்றன.	சோளம், கம்பு முதலியவற்றின் செடிகளைக் காட்டி விளக்கவும்.
4. சில இலைகள் அதிக அகலமாக இருக்கின்றன.	வாழை இலையைக் காண்பித்து விளக்கவும்.
5. சில செடிகளின் இலைகளுக்கு காம்புகள் வெகு நீளமாயிருப்பதால் இலைகள் பக்கங்களில் வெகுதூரம் பரவியிருக்கின்றன. சில படரும் தாவரங்களின் இலைகளுக்குக் காம்புகள் நீளமாயில்லாமல் குட்டையாக இருக்கின்றன.	ஆமணக்கு, அரசு, பூவரசு, அவரைக்கொடி முதலியவற்றின் கொப்புகளைக் காண்பித்து விளக்கவும்.
6. சில தாவரங்களின் இலைகள் தண்டில் மாறிமாறி அமைந்திருக்கின்றன.	ஆல், அரசு இவற்றின் கொப்புகளைக் காண்பித்து விஸ்தரிக்கவும்.
7. சில இலைகள் ஜோடி ஜோடியாய் எதிர் எதிராக அமைந்துள்ளன.	எருக்கு, அகத்தி, வாதாமடக்கி, வேம்பு முதலியவற்றின் கொப்புகளைக் கொண்டு விளக்கவும்.
8. சில தாவரங்களின் இலைகள், தண்டின் கணுக்களில் வட்டமாக அமைந்திருக்கின்றன.	அலரியின் கொப்பைக் காண்பித்து விளக்கவும்.
9. சில இலைகள் வழுவழுப்பாயும், சில ஒருவித சுணைகளோடும், வேறு சில ஒருவித மிருதுவான பொடி படர்ந்துள்ளவைகளாயும் அமைந்திருக்கின்றன.	ஆல், வெண்டை, எருக்கு இவற்றின் கொப்புகளைக் காட்டிப் பிள்ளைகளை கையாடும்படி செய்து, விளக்கவும்.

N. B.: விஷயத்தின் ஒவ்வொரு பாகமும் போதிக்கும்போது, மாணவருக்குத் தெரிந்த வேறு சில உதாரணங்களைக் கூறும்படிக்குத் தூண்டவும்.

பரீக்ஷை

1. இலைகள் உருவத்திலும், அமைந்திருக்கும் விதத்திலும் பலவகைப்படுவதின் காரணம் என்ன?

2. இலைகள் உருவத்தில் வித்தியாசப்பட்டிருப்பதை விவரமாய்க் கூறுக. ஒவ்வொன்றுக்கும் 2 உதாரணங்கள் தருக.

3. இலைகள் அமைந்துள்ள விதத்தில் பலவகைப்பட்டிருப்பதை விஸ்தரிக்க. ஒவ்வொன்றுக்கும் 2 உதாரணங்கள் கூறுக.

க. ப. சு.

போதுமான அளவு சூரிய உஷ்ணத்தைப் பெற, இலைகள் :—

1. சில பெரியவை, சில சிறியவை. வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளன.

2. ஈட்டி, இருதயம், முட்டை வடிவங்களுள்ளவை.

3. இலைகள் நீளமானவை. பக்கங்களில் பரவக்கூடும்.

4. அதிக அகலமான இலைகளுமுண்டு.

5. சில இலைகளின் காம்புகள் நீளம். படரும் கொடிகளின் இலைகட்கு காம்புகள் குட்டை.

6. இலைகள் தண்டில் மாறிமாறியுண்டு.

7. ஜோடி ஜோடியாய், எதிர் எதிரே அமைந்த இலைகளுண்டு.

8. இலைகள் தண்டின் கணுக்களில் வட்டமாயுண்டு.

9. இலைகள் வழுவழுப்பாயும், சுணைகளோடும், மிருதுவான தூள் படர்ந்தும் இருக்கின்றன.

உபாத்தியாயர் காற்றோட்டத்தைப்பற்றி போதித்துவிட்டு அப்பியாசத்தில் :

உபாத்தியாயர் :—சன்னலினால் என்ன பிரயோஜனம்?

பையன் :—சன்னலைத் திறந்துவைத்து அதன் பக்கத்தில் உட்கார்ந்து படிப்பதுபோல் பாவனைசெய்து வெளியில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்க்கலாம்.

W. A. Pancras, *H 2 A.*

நமது சிறுவர்களின் சுகாதாரம்

(Motcham)

(கொத்து 31, மலர் 4, பக்கம் 114-ன் தொடர்ச்சி)

எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானமாவதேபோல் ஐம்புலன்களில் கண்ணே பிரதானமானது. நமக்கு ஜீவனுதாரமளிப்பது நமதிரு கண்களே! ஒரு பொருளை நெடு நேரம் கூர்ந்து பார்ப்பதாலும் நொடிக்கு நொடி வெளிச்சத்தையும் இருட்டையும் மாறிமாறி நோக்குவதாலும், சிறிய எழுத்துக்களை வெய்யிலிலும், மங்கிய வெளிச்சத்திலும் வாசிப்பதாலும் கண் சிரமமடைகிறது. இதனுல் கண் நோய் ஏற்பட்டு இளைஞர்கள் நொந்து வருந்துவார்களாகில் முதிர்ந்த வயதில் மிகவும் கஷ்டமுறுவர்.

ஐரிஸ் (Iris) என்னும் கருவிழிக்குள் கண்ணுடி பில்லை போன்ற உயிருள்ள இயற்கை லென்ஸ் (lens) ஒன்றுளது. இது சரியாக இராவிடில்தான் இக்காலத்தில் மூக்குக் கண்ணுடிகளை சிறுவர்களும், பெரியவர்களும், ஆண்களும், பெண்களும், இளையோரும், முதியோரும் தரித்துக்கொள்ள நேரிடுகிறது. இந்த லென்ஸ் பழுதுபட, மின்சார விளக்குகளும், ஸினிமாக்களும் (cinema) முக்கிய காரணமெனக் கூறப்படுகிறது. அன்றியும் இதனுல் கிட்டப்பார்வை (Short-sight) தூரப்பார்வை (Long-sight) முதலிய பார்வைக் குறைபாடுகளும் ஏற்படுகின்றன. ஆகவே ஆசிரியர்கள் இவ்விதப் பார்வைக் குறைபாடுகளைக் கவனித்துப் பெற்றோர்களுக்குத் தெரிவித்துத் தகுந்த கண் வைத்தியம் செய்யத் தூண்டவேண்டும்.

இதுபற்றி வகுப்பறையில் போதுமான வெளிச்சம் இடது பக்கத்தினின்று வருவதற்கு வழி செய்யவேண்டும். பிள்ளைகள் வாசிக்கும்போது 12" தூரத்தில் புத்தகத்தைப் பிடிக்கும்படி பார்த்துக்கொள்ளவும். கண்வலி வந்தாலும், மேக நீர் கண்ணினின்றுகுந்தாலும் கண் வைத்தியரிடம் காட்டி சிகிச்சை பெறவேண்டும்.

சில சிறுவர்களின் நாவின் அடி நாக்கில் வீக்கம் உண்டாகும். இதற்கு (Adenoids) உள்நாக்கு நோய் என்று பெயர். இதற்குக் காரணம் தொண்டையில் இல்லை. உள் மூக்கிலுள்ள மெல்லிய ஜவ்வு வளர்ந்து ஒருவித படுவு உண்டாகி வீக்கம்

அதிகரிக்கிறது. மூக்கால் சுவாசிக்காமல் வாயால் சுவாசிப்பதே இதற்குக் காரணம். இதனால் வெளிவாயுவிலுள்ள விஷ ஜீவக்கிருமிகள் உட்சென்று மேலே கூறியபடி சதை வளர்ச்சி ஏற்படுத்தித் துன்புறுத்துகின்றன. ஆகவே வாயின் வழியாய் சுவாசிக்கும் கெட்ட பழக்கத்தையும் அதனால் வரும் தீமைகளையும் எடுத்தோதி மூக்கினால் சுவாசிக்கும்படி வற்புறுத்தவேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

அன்றியும் எதிர்பாராதபடி நேரிடும் காயங்கள், இரணங்கள் முதலிய ஆபத்துக்களுக்காக முதற் சிகிச்சை (First-aid) புரிவதும் ஆசிரியரது கடனே. பாடசாலைகளில் வாலிபச்சாரணர் இயக்கம் (Scout-movement) நடத்திவருவதும் இம் முதலுதவிபுரிவதற்கு ஓர் வழிபாடன்றோ. இது சம்பந்தமாக ஒவ்வொரு பாடசாலையிலும் முதலுதவி மருந்துப் பெட்டி (First aid-box) ஒன்று வைத்துக்கொள்வது சிறந்த காரியமே. இதிலடங்கிய மருந்துகளும், கருவிகளும் பின்வருமாறு :—

இரண வைத்திய சம்பந்தமாய் :—(Surgical)

1. 4 oz. of Cottonwool (4 அவுன்ஸ் பருத்திப்பஞ்சு).
2. 4 oz. of Surgeon's lint (4 அவுன்ஸ் இரண வைத்தியத் துணி.)
3. Two bandages (இரண்டு காயக்கட்டுத் துணிகள்.)
4. Efficient antiseptic (விஷக்கிருமிகளைக் கொல்லும் முறி மருந்து)
5. 5 oz. of Tincture iodine (5 அவுன்ஸ் டிஞ்சர் அயோடின்) இது விஷத்திராவகம். வீக்கங்களின் மீது தடவினால் குணமாகும். வெட்டுக்காயங்கள், சிராய்த்த புண்கள் இவைகளைக் கழுவின பிறகு இத்திராவகத்தைத் தடவலாம்.
6. 2 rolls of Adhesive plaster (2" நீளமுள்ள பிளாஸ்திரி.)
7. 2 feet of rubber tubing (2 அடி நீளமுள்ள ரப்பர் குழாய்.)
8. 4 oz. of Boric acid (4 அவுன்ஸ் போரிக் ஆசிட்.)
9. One Thermometer (ஒரு உஷ்ணமானி.)

10. A pair of surgical scissors (ஒரு ஜோடி இரண வைத்திய கத்திரிக்கோல்கள்.)
11. Safety pins ; a clean towel (ஊக்கூசிகள் ; ஓர் சுத்தமான துவாலே.)
12. Picric acid (பிக்ரிக் ஆசிட்.)

மருந்து வகை சம்பந்தமாய் (Medical)

1. Aromatic spirit of Ammonia 1 oz. (அமோனியம் அரோமாட்டிக் ஸ்பிரிட்) இதில் சில துளிகளைக் கைக் குட்டையிலிட்டு உறிஞ்சினல் மூர்ச்சை மயக்கம் தெளியும்.)
2. Bicarbonate of soda : $\frac{1}{2}$ to 1 oz (பைகார்போனேட் ஆவ் சோடா) இதை இருதயத்திலுண்டான புண் களுக்கும், வாந்தி எடுப்பதற்கும் உபயோகப்படுத்த லாம்.
3. Aspirin Tablets (ஆஸ்ப்ரின் வில்லைகள்) நல்ல தூக் கத்தை உண்டு பண்ணும், தலைவலியையும் தீர்க்கும்.
4. Oil of cloves (குளோவ்ஸ் எண்ணெய்) பல் வலிக்குச் சொட்டுக் கணக்காய்த் தடவலாம்.
5. Epsom salt (பேதி உப்பு) ஒரு பொட்டணம் 6 பைசா. ஆனல் தற்காலத்தில் பேதிஅல்வா ஒரு பொட்டணம் 1 அணு. இது மிகவும் நல்லது. பேதியாவதற்குச் சஞ்சீவி மாத்திரையும் உபயோகப் படுத்தலாம்.
6. A bottle of quinine Hydrochloride tablets (கொய்னு ஹைடிரோகுளோரைட் வில்லைகளுள்ள ஒரு சீசா.) இது ஜுரத்திற்குக் கொடுக்கும் மருந்து. முக்கியமாக மலேரியா ஜுரத்திற்கு கொய்னு அவ சியம். கொய்னு மாத்திரைகள் எப்போதும் கைவச மிருப்பது நல்லது.
7. Tincture iodine (டிஞ்சர் அயோடின்) 5 துளிகளை சிறிது ஜலத்தில்விட்டுக் குடித்தால் எவ்வித வாந் தியானுலும் போக்கிவிடும்.
8. A packet of Belladonna plaster (பெல்டோனு பிளாஸ்திரி) இது வலியை வாங்கும்.

9. Zinc oxide & Boric powder (ஸிங்க் ஆக்ஸைடும் போரிக் தூளும்) இந்த வெள்ளைப் பொடியைப் புண்கள், சொரி சிரங்கு, பூச்சிக்கடி, வேர்க்கூறு முதலியவற்றின்மீது தூவலாம். போரிக் தூள் ஜலம் வெட்டுக்காயம், புண் இவைகளைக் கழுவுவதற்கு உதவும்.

10. A bottle of Hydrogen Peroxide (ஹைடிரோஜன் பெர்ஆக்ஸைட் உள்ள ஓர் சீசா) காதுவலிக்கு 1 அல்லது 2 துளி விட்டால் உள்ளிருக்கும் அழுக்குகளைக் கொண்டுவந்துவிடும்.

மேற்கூறிய ஓர் முதலுதவிப் பெட்டியை உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் வைத்திருப்பாராகில், பல சிறிய வியாதிகளையும் அகற்றி, பாலரைப் பள்ளிக்குத் தக்கவராக்கி, பெற்றோர்க்கும் இன்பமூட்டி, பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு வர ஆர்வத்தை உண்டுபண்ணி, கிராமக் கல்வியை முன்னேற்றத்திற்கு கொண்டுவருவதுமல்லாமல், ஒவ்வொருவரையும் தேச பக்தனுவதற்கு வேண்டிய வழிகளையும் காட்டுகிறார் என்பதற்குக் கிஞ்சித்தும் ஐயமில்லை.

வீட்டுக்குச் சொந்தக்காரர் :—என்ன ஸார்! வீட்டு வாடகை அதிக நாளாகியும் இன்னும் கொடாமலிருப்பது சரியல்ல. இன்றைக்காவது கொடுங்கள்.

வாடகைக்காரர் :—என்ன ஸார்! தாங்கள் பேசுவது வெகு வேடிக்கையாயிருக்கு! வீடு கொடுக்கும்பொழுது தாங்கள் "இந்த வீட்டை வாடகை வீடு மாதிரி எண்ணவேண்டாம்; உங்கள் சொந்த வீடென்று நம்புங்கள் என்று சொல்லிவிட்டு இப்பொழுது வாடகை கேட்பது நீதியாகுமா?"

* * *

எஜமான் :—"என்னடா, குழம்பில் இவ்வளவு உப்பைப் போட்டிருக்கிறாய்?"

சமையற்காரன் :—"என்னை எப்பொழுதும் நினைப்பதற்காக."

எஜ. :—"என்னடா மடையா உளறுகிறாய்?"

சம. :—"உப்பிட்டவரை உயிர் உள்ளளவும் நினை" என்பது தங்களுக்குத் தெரியாதா?

READY FOR SALE !

Registers for Elementary Schools

(Prepared according to the New Rules)

		Rs. As. Ps.
Record Sheets	100	0-10-0
Monthly Return Sheet	Each	0-0-6
Stagnation Register Sheet	,,	0-0-6
Admission Register (12 pp.)	,,	0-3-0
Attendance Register for Masters (12 pp.)	,,	0-3-0
,, for Pupils ,,	,,	0-2-6

Please apply to The SUPERINTENDENT,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.

வெளியாகிவிட்டது !

புதிய பதிப்பு !!!

பிரதாப முதலியார் சரித்திரம்

ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

370+32 பக்கங்கள் விலை ரூ. 1—2—0.

(தபாற் செலவு பிரத்தியேகம்)

வேண்டியவர்கள் :—

திருச்சிராப்பள்ளி
செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்
சூப்பெரின்டெண்டுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம்
சென்னை 600 008
182466.

உயர்ந்த வேலை! குறைந்த விலை!!

ஒவ்வொரு
அட்டையிலும்
கண்களைக் கவரும்
மூவர்ணப்படம்.

ஒவ்வொரு ஷீட்டும்
மூன்று கலரில்
அச்சிடப்பட்டுள்ளது.

காலண்டர்
1 விலை அணா 4
தபால் சார்ஜ
பிரத்தியேகம்.

ஒரே தடவையில்
10 காலண்டர்
வாங்கினால்
1 காலண்டர் இனாம்.

எமது வழக்கமான
செயின்ட் ஜோசப்ஸ்
இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்

1941-ம் வருஷ மாதாந்தர ஷீட்

காலண்டர்

தமிழ், இங்கிலீஷ் தேதிகளுடன் முக்கிய
கத்தோலிக்குத் திருநாட்கள்,
இந்து, முஸ்லீம் பண்டிகைகளுடன்
கூடியது.

வெகு நேர்த்தியான வர்ணங்களால்
பார்ப்பவர் கண்களுக்கு நேத்திரானந்த
திருப்தியைக் கொடுக்கும்

ஆர்டருக்கு முந்துங்கள்.

**இம்மாதக் கடைசியில்
விற்பனைக்குத் தயாராயிருக்கும்.**

திருச்சினாப்பள்ளி செயின்ட்
ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரசுக்கு எழுதவும்.

விற்பனைக்குத் தயார்! ஆர்டருக்கு முந்துங்கள்!!

1941-ம் வருஷ கத்தோலிக்கு சத்தியவேத
பஞ்சாங்கம்

இதில் பிரதி வருஷமும் காணப்படும்

திருநாளட்டவணை,

இங்கிலீஷ், தமிழ் தேதிகள்,

சூரிய சந்திர கிரகணங்கள்,

ஒவ்வொரு தினமும் குருவானவர் அணிந்து கொள்ளவேண்டிய பூசை ஆயத்தம்,

விசுவாசிகள் திருநாட்களில் அடையக் கூடிய பலன்கள்,

1941-வரு ஜெப அப்போஸ்தல சபையின் மாதாந்தரப் பொதுக் கருத்துகள்,

விசேஷ கருத்துகள் முதலியவைகளைப்பற்றி குறிப்புகளும்,

ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் பூசையில் வாசிக்கவேண்டிய சுவிசேஷக் குறிப்பும்,

இன்னும் சில போதகங்களும்

இப்புதுவருட பஞ்சாங்கத்தில் காணலாம்.

விலை: அணா **1–6** பை.
தபாற்செலவு **0–9** பை.

பிரதிகள் வேண்டுவோர்:
திருச்சி அர்ச். சூசையப்பர் அச்சாபீசுக்கு எழுதவும்.

சத்திய போதினி

இஃது நம் தமிழ்நாட்டின்
ஒரு சிறந்த
மாதப் பத்திரிகை

இதில் அடங்கியுள்ளவை:

தேசிய
விஷயங்கள்,
சன்மார்க்க
போதனைகள்,
மாதர் பகுதி,
சுகாதாரம்,
இனிய
கட்டுரைகள்,
பற்பல
சமாச்சாரங்கள்,
சங்கீதப் பகுதி,
விகடப் போட்டி.

ஒவ்வொரு வெளியீட்டிலும்
ஒரு வர்ணச்
சித்திரப்படம் உண்டு.

வருஷ சந்தா தபால் உள்பட, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு ரூ. 1—0—0

வருஷ சந்தா தபால் உள்பட பர்மா, ரங்கூன் ரூ. 1—6—0

வருஷ சந்தா தபால் உள்பட சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 2—0—0

ஆயுள் சந்தா எல்லாவிடங்களுக்கும் ரூ. 20—0—0

விளம்பரங்கள், காணிக்கைகள், நன்றியறிந்த தோத்திரங்கள், வியாசங்கள், கட்டுரைகள், சந்தாத்தொகை முதலியவை அனுப்பவேண்டிய விலாசம்:—

சூப்பேரின்டேன்டேண்ட்,
செயின்ட் ஜோசப்ஸ்
இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சிறுப்பள்ளி.

உலகம் போகிற போக்கு

(ஒரு ஹாஸ்யம்)

G. Arokiasamy, *S 1*.

மாலை மணி சுமார் 5 இருக்கும். ஒரு நகரத்தின் மத்தியில் ஒரு அழகான நந்தவனம். அங்கு ஆடவரும், மாதரும், வயோதிகரும், இளைஞரும், வாலிபரும் வருவதும் போவதுமாயும், இருக்கின்றனர். சில பெரியோர் அங்கு போடப்பட்டிருக்கும் ஆசனங்களில் அமர்ந்து தங்கள் கரங்களில் பத்திரிகைகளை வைத்துக்கொண்டு வாசித்தும் மற்றவருடன் சம்பாஷித்துக்கொண்டுமிருக்கின்றனர். மற்றும் சிலர் அங்கு அடிக்கும் தென்றல்காற்றை அநுபவிக்கவும் அந்த நந்தவனத்தின் வனப்பைப் பார்த்துவர ஆவல்கொண்டு உல்லாசமாக அதைச் சுற்றி வந்துகொண்டிருக்கின்றனர். நந்தவனத்தில் மற்றொருபுறம் சிறுவர் சிறுமிகள் பல விளையாட்டுகள் விளையாடிக்கொண்டும் ஆடிப் பாடிக்கொண்டும் இருக்கின்றனர். அங்குள்ள ஒவ்வொருவருடைய மனமானது ஒவ்வொரு காரியங்களிலீடுபட்டிருந்தது.

அவ்வழகிய நந்தவனத்தின் மத்தியில் இருப்பது ஒரு அழகிய ஏரி. அது அதிக ஆழமிகுந்ததும் அதிக நீரைக்கொண்டுள்ளதுமாயிருந்தது. திடீரென அவ்வேரியின் ஜலம் பயங்கரத்துக்குரியவிதமாய்க் கலக்கப்படுகிறது. அதனால் அங்குள்ள ஒவ்வொருவரின் கவனமும் அந்த ஏரியின்கண் நாடியது. ஆனால் அதோடு நிற்காமல் அவர்கள் கால்களும் அந்த ஏரியை நாடியடைந்தது. அப்போது அவர்கள் அங்கு பார்த்தது என்ன? வெறும் நீர்க்குமிழிகள்தான். ஆனால் கொஞ்சநேரத்தில் கறுத்த நீண்ட சடைபோன்ற மயிரையுடைய தலை தெரியலாயிற்று. உடனே ஒவ்வொருவருடைய மனத்திலும் பீதி குடிகொண்டது. சிலர் ஆச்சரியப்படுகின்றனர். சிலர் அது ஒரு ஆள் என்கின்றனர். மற்றும் சிலரோ அது யாராயிருக்கலாம் என்கின்றனர். ஆனால் மற்றொரு கரையிலிருந்து "உதவி, உதவி" என்று கூக்குரலிடுகின்றனர். இப்படியிருக்க கும்பல் மத்தியில் ஒரு இள வாலிபன் படித்த அறிவாளியாகவே தோன்றினான். திடகாத்திரமும் தைரியமும் உள்ளவனென்று அவனைப் பார்ப்போரே தெரிந்துகொள்ளுவர். மேற்சொன்ன தலை தெரிந்ததுதான் தாமதம்; இவன் தன் ஆடைகளைக் களைந்துவிட்டு உடனே ஏரியில் குதித்தான். அவனும் தண்ணீரில்

அமிழ்ந்தினன். அமிழ்ந்தியதுதான் தாமதம் மறுவினடியில் ஒரு பெரிய உருவத்துடன் மேலே தோன்றினன். (இந்த இடத்தில் அவ்வுருவம் விழுந்ததிற்கும் வாலிபன் குதித்து உரு வத்துடன் மேலே வந்ததற்கும் இடையில் சில வினடிகளே சென்றன என்பதை வாசகர்கள் அறிவார்களாக.) அவன் கொண்டுவந்த உருவத்துக்குக் கொஞ்சம் அறிவும் தெளிவும் இருந்தது. அது உடனே வாய்திறந்து அவ்வாலிபனைப் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டு களைப்பினல் தடுமாறின குரலோடு "என்னை விட்டுவிடு நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன், என்னைத் தடுக்காதே" என்றது. அதைப் பொருட்படுத்தாத அவ்வாலிபன் அப்பெரியாரைப் பார்த்து "இல்லை ஐயா, தாங்கள் சற்கொலை செய்துகொள்வதை மற்ருெரு நாள் மாற்றிவைத்துக்கொள்ளலாம், இப்போது தாங் கள் என்னுடன் வரவேண்டும் என்று தெரிவிக்க வருந்துகின் றேன். ஏனெனில் நான் லைப் சேவிங் மெடல் (Life Saving Medal) என்ற பரிசைப் பெற ஆவலுற்று இருக்கிறேன். ஆகை யால் என்னுடன் தாங்கள் கட்டாயம் வரத்தான் வேண்டும்" என்று நீந்துவதால் ஏற்படும் அசைவால் தடுமாறிய குரலில் பேசியவண்ணம் கரை வந்துகொண்டிருந்தான். அப்போது அங்கு கூடிய கும்பலைக்கண்டு இரண்டு போலீஸ் வீரரும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் வந்தார்கள். நம் வாலிபன் கரை சேர்ந் ததும் அப்பெரியவரைப் படுக்கவைத்துப் பலவித உபசாரங் களைச் செய்துகொண்டிருந்தான். அங்கிருந்தவர்கள் எல்லோ ருடைய கண்ணும் அவ்வாலிபன் மேலேயே இருந்தது. ஆனல் அவர்கள் மனதோ அவன் யார்? அவன் பெயரென்ன? என்ன குலத்தான் அவன்? என்ற கேள்விகளைப் போடுவதிலேயே ஈடுபட்டிருந்தது. ஆனல் அவர்கள் வாயானது அவனைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதிலேயே கருத்தாயிருந்தது. இவற்றையெல் லாம் கண்ட சப் இன்ஸ்பெக்டர் சில குறிப்புக்களைக் குறித்துக் கொண்டு போய்விட்டார். பிறகு என்ன நடந்தது என்று நான் சொல்லவேண்டியதில்லை. நீங்களே யூகித்துக்கொள்ள விட்டுவிடுகிறேன். ஆனல் ஒன்றுமாத்திரம் சொல்லிவிடுகிறேன். அது என்னவெனில் தற்காலத்தில் பலவிஷயத்திலும் "உலகம் போகிற போக்கு" இப்படித்தான் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

இந்நாளே எம் நன்னுள்

V. M. Maria Arul. S. 2.

அக்டோபர்-மீ 28-ம் தேதி காலை ஆதவன் ஜெகஜோதியாய் பிரகாசிக்கிறுன். ஆரவாரமாய் பிள்ளைகள் இங்குமங்கும் அலேகின்றனர். அப் அப் என்ற சப்தங்கள் காதுகளைத் துளைக்கின்றன. அடிக்கடி வாத்தியத்தொனி. அரிய பெரிய பந்தயங்கள் நடைபெறுகின்றன. கெம்பீரமாய் யூனியன் ஜாக் பறக்கின்றது. இவ்வொய்யாரத்தை 800 கண்களுக்குமேல் கண்டு களிகூருகின்றன. இப்பெருங் கூட்டத்தினிடையே சங். P. J. திரவியநாதரும் மற்ற பெரியோரும் வீற்றிருக்கின்றனர். ஓகோ! இன்று வருடாந்திரக் கொண்டாட்டமோ?

இது என்ன அதிசயம்! ஒருநாளுமில்லாத விநோதம். குஷ்டரோகி, பிச்சைக்காரன், வண்ணுன், பட்டிக்காட்டான், குரங்குகளும், குரங்காட்டியும், இவர்கள் கொட்டங்களையடக்க போலீஸ்களும், சப் இன்ஸ்பெக்டரும் தம் தம் வேலையைச் செய்கின்றனர். பிள்ளைகள் இவ்வளவு விநோதமாய் நடப்பர் என்று நினைக்கவேயில்லை!......பந்தயம் முடிவடைகிறது. அநேகர் செக்கண்டரி ஜூனியர் M. லாசரைப்பற்றி அதிகம் பேசிக்கொள்ளுகின்றனர்.

மாலை 4-30 மணி. ஜனத்திரள் எம் சபாமண்டபத்தை (Assembly Hall) நோக்கித் திரள்கின்றது. ஏற்கனவே நிறைந்துவிட்டது. பிந்தி வருகிற முக்கியஸ்தர்களுக்கு எம் மரியாதை செய்யக்கூடுமென்று அதிகாரிகள் கலங்குகின்றனர். பாவம், அநேகர் இடமின்றித் தவிக்கின்றனர்! திருச்சி ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீமான் C. ரகுநாதன், B.A., L.T., T.D. (Lond.) கடலலைபோன்ற கரகோஷத்தினிடையே, மேடைக்கு எழுந்தருளினர்.

வாழ்த்துப்பாடல், வீணைராகம் முதலியவை சபையோரை பரவசத்திலாழ்த்தியது. கருமமே கண்ணுன, கழகத் தலைமையாசிரியர் கனம் லூர்துசுவாமி அவர்கள் வருடாந்திர ரிப்போர்ட்டை வாசித்தனர்.

போன வருஷம் சர்க்கார் பரிக்ஷைக்கு அனுப்பப்பட்டவர்களுள் 98% பாஸ்—(இடியென்ன கரகோஷம்). மாதமொருமுறை மலரும் பூங்கொத்து 24 பக்கங்களிலிருந்து 32-க்கும், பிரதிகள் நூறுகளிலிருந்து ஆயிரங்களுக்கும் நவீனமுறையில் சீர்திருத்தப்பட்டதால், தமிழ்நாட்டில்மாத்திரமல்ல, சிலோன், பர்மா, மலேயா, தென் ஆபிரிக்கா முதலிய நாட்டிற்கும் பரவியிருக்கின்

றது—(கரகோஷம்). புதுப் பாடத்திட்டத்திற்கு ஏற்றபடி அநேக புதுப் புத்தகங்களை, புத்தகாலயம் பெற்றுளது. 25 பேர் கொண்ட ஒரு சாரண இயக்கம் ஸ்ரீமான் A. D. M. பிரகாசம் அவர்களது முயற்சியால் அகில இந்திய இயக்கத்தோடு இணைக்கப்பெற்றுளது—(cheers). புதிதாக இவ்வருடம் நம் மாணவருக்கு சங்கீதம் கற்றுக்கொடுக்கப்படுகின்றது. பல இடையூறுகளிடையே நம் உள் மாணவர்களுக்கு எதிர்பாராத பல நன்மைகள் வழங்கப்பட்டன. பழைய மாணவர் சங்கமொன்று நிறுவப்பட்டு இனிது நடைபெற்றுவருகின்றது...... என்ற காரியங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

குழுமியிருந்த கூட்டத்தின் கரகோஷத்தினிடையே பரிசுகள் வழங்கப்பட்டன. சர்க்கார் பரிக்ஷையில் முதல் அம்சம் எடுத்தோருக்கு, வெள்ளிப் பதக்கங்களும், முதல் வருஷப் பரிக்ஷகளில் திறமையைக் காட்டியோருக்கும், காலைப் பந்தயத்தின் ஜெய வீரர்களுக்கும், குரங்கு, குரங்காட்டிக்கும் பரிசளித்தனர். அவர்களுக்கு எம் சுபசோபனம் உரித்தாகுக.

பிறகு அக்கிராசனதிபதி சங். லூர்துசுவாமி=Activity "இவர் முகத்தாக்ஷணியத்திற்கல்ல, கட்டுரையல்ல, உண்மை உணர்ச்சியை வெளிப்படுத்துகிறேன்." சுயநலம் கருதாது அல்லும் பகலும் அயராது உழைக்கும், இப்பெரியாரை நானே அனுபோகத்தில் கண்டுள்ளேன். இவரை நினைக்கும்போதெல்லாம் Rev. Fr. Lourduswami=Activity! எக்காரியத்தில் எப்படி சீர்திருத்தவேண்டும் என்ற ஒரே அவாக்கொண்ட பெருமானையடைய, R. C. போதனாமுறைப் பாடசாலையே, நீ பெற்ற பாக்கியமே பாக்கியம், என்று எம்மனதைக் கொள்ளை கொண்ட பீடிகையுடன், தமிழில் ஒரு பிரசங்கம் செய்தனர். அதிலிருந்து சில முத்துக்கள்......இப்பாடசாலை, மற்றவைகளுக்கு, முன்மாதிரிகை! தென்னிந்திய ஆரம்பக்கல்வியின் ஞான வெளிச்சம். ஆற்றலும் விடாமுயற்சியும் ஆசிரியர்க்கழகு என்று அறிவுறுத்தும் கேடயம்......இங்குள்ள போர்டிங், இக்கழகத்தின் அணிகலம்...நமது தேசம், சுயராஜ்யம் பெற்று செழிக்கவேண்டுமாயின், இதைப்போல் பாடசாலைகளும், இத்தலைமையாசிரியப் பெருமான்போல் மகான்களும் தேவை!...... என்று உரைத்தார்.

"நான் ஒரு அரசனாக இருப்பேனேயானால்" என்ற நாடகம் $2\frac{1}{2}$ மணிநேரம் நீடித்தது. அரை மணிதான் என்றும், இதுவரை இங்கு நடைபெற்ற நாடகங்களில் இதுவே மகா

உன்னதமானது, உண்மையாகவே சினிமாபோல் இருந்தது என்றும், சென்னை முதலிய வெளியூர்களிலிருந்து விஜயம் செய்த பெரியார்களும், பழைய மாணவர்களும், அறிஞர்களும் பேசிக்கொள்ளுகின்றனர். இன்னும் ஒருமுறை "டவுன் ஹாலில்" நடிக்க விண்ணப்பங்களுக்குமேல் விண்ணப்பங்களும் குவிகின்றன!

இந்நாடகத்தை கஷ்டப்பட்டுத் தயாரித்த கனம் லூர்து சுவாமியவர்களுக்கும், பிச்சை பிள்ளை உபாத்தியாயருக்கும், ஏனைய நண்பர்களுக்கும், கண்டு களித்த யாவர்போராலும், பழைய, புதிய மாணவர் யாபோராலும் எம் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம். சுபம்.

எமது உல்லாசப் பிரயாணம்

M. Lourdu, *H. 2. A.*

அக்டோபர்-மீ 4-ம் தேதி நாங்கள், சரியாய் 2-45-க்கு காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு 3 மணிக்குத் திவ்வியபலிப் பூசைக்குப் போனோம். பூசை முடிந்ததும் 3-30-க்கு எமது போர்டிங்கை விட்டு ஜங்ஷனுக்குப் போனோம். அங்கு சரியாய் 4-15-க்கு ட்ரெயின் புறப்பட்டது. வண்டி புறப்பட்டதும் நாங்கள் எல்லோரும் "ஆவே மாரிஸ் ஸ்தெல்லா" என்ற இனிய கீதத்தைப் பாடினோம். ட்ரெயின் சரியாய் 5-30-க்குத் தஞ்சாவூர் வந்தது. அப்பொழுது எங்களது வரவை எதிர்கொண்டழைக்கவருவதுபோல் ஆதவனும் கீழ்க்கடலிலிருந்து, கார்முகிலின்மீது தன் ஒளியை வீசி அக்கார்முகிலை வெண்முகிலாகச் செய்துகொண்டிருந்தான். அங்கிருந்து 6 மணிக்கு ட்ரெயின் புறப்பட்டுச் சரியாய் 9-15-க்கு நாகப்பட்டணம் சென்றது. அங்கு காலை போஜனம் அருந்திவிட்டு 11 மணிக்கு நாகப்பட்டணம் ட்ரெயினிங் ஸ்கூலுக்குச் சென்றோம். போகும்பொழுது கதிரவன் தனது வெம்கதிர்களை எங்கள்மீது வீசி அவ்வுஷ்ணத்தினால் நாங்கள் ஓடோடிச் சேரும்படியாகச் செய்தான். அங்கு சென்று அப்பள்ளிக்கூடத்தையும் சுற்றுப்புறங்களையும் கண்டுகளித்தோம். நாங்கள் போகும்பொழுது கதிரவன் செய்த தீமையை அறிந்த கடல் தனது தண்ணீரின் குளிர்ச்சியாலும் தனது காற்றினாலும் எங்களை ஆற்றித் தேற்றினது. அங்கேயே இருந்துவிட்டு 1 மணிக்குப் புறப்பட்டு வந்து மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு

3 மணிக்கு யாவரும் சேர்ந்து எங்கள் ஆசிரியர்களால் வழியைத் தெரிந்துகொண்டு அவர்களோடே (Rolling Mills) ரோலிங் மில்ஸ், பார்க்கச் சென்றோம். அங்கு சில யந்திரங்களைக்கொண்டு அபூர்வமான வேலைகளைச் செய்தார்கள். அதில் சில யந்திரங்கள் இரும்பை இழைக்கிறது. இன்னும் சில இரும்பைத் தொளை செய்கிறது. இன்னும் சில பெரியபெரிய ஆணிகளுக்கு மரை போடுகிறது. இப்படியான வேலைகளைப் பார்த்துவிட்டு வேறொரு கட்டிடத்துக்குள் நுழைந்தோம். அங்கு பெரிய இரும்புத் துண்டுகளை ஒரு இடத்தில் நெருப்பைப்போல் காயவைத்து, அதை ஜன்னல்களுக்கு வைக்கும் கம்பிகளாகச் செய்ததைப் பார்த்தோம். அங்கு யந்திரங்கள் அந்த இரும்புத் துண்டை ஒரு துவாரத்திலிருந்து மற்றொரு துவாரத்தில் நுழைத்து நுழைத்து சிறு கம்பிகளாகச் செய்து, அது தானே ஒரு இடத்திற்கு ஓடுகிறது. அப்படி ஓடும்பொழுது மற்றொரு யந்திரம் அந்தக் கம்பியை இரண்டு துண்டுகளாக வெட்டுகிறது. வெட்டின துண்டுகள், தாமே வேறோர் இடத்தில் சேருகிறது. மற்றொரு இடத்தில் இரும்பைக் காய்ச்சிப் பற்பல சாமான்கள் வார்த்தார்கள். நாங்கள் பார்த்தபொழுது அக்கட்டிடமானது ஒரு நரகம்போல் இருந்தது.

பின்பு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு 5 மணிக்கு வங்காளக்குடாக்கடலின் கரையை அடைந்து அங்கு ஸ்நானம் செய்தோம். அக்கடலானது இடியேறுபோல் சப்தித்துக் கொண்டிருந்தது. பின்பு நாகப்பட்டணம் கோவிலுக்குச் சென்று ஜெபம் செய்துவிட்டுத் திரும்பினோம். அங்கிருந்து புறப்பட்டுப் போய் 6-30-க்கு இராச்சாப்பாடு அருந்திவிட்டு சுமார் 8 மணிக்கு நாகப்பட்டணத்திலிருந்து புறப்பட்டு ஓடம் ஏறி ஆற்றைக் கடந்து கடற்கரையின் வழியாக வேளாங்கண்ணிக்குச் சென்றோம். போகுங்கால் கடலானது எங்களது வரவைக்கண்டு மகிழ்ந்து தனது அலைகளினால் எங்களது வேஷ்டிகளை நனைத்ததானது எங்களை கட்டித் தழுவினதுபோலிருந்தது. மேலும் கடல் நண்டுகள் தம் செந்நிறத்தைக் காட்ட வெளியில் ஓடி ஓடி வர அவைகளோடு விளையாடிக்கொண்டு சந்தோஷமாக இரவு சுமார் 11-40-க்கு வேளாங்கண்ணியை அடைந்து அங்கு ஒரு சத்திரத்தில் படுத்து அன்றிரவைக் கழித்தோம். பின்பு 6 மணிக்குத் திவ்வியபலிப்பூசை கண்டு காலைப்போஜனம் அருந்தியபின் அங்கிருந்த சுவாமியவர்களுக்கு நன்றிசெலுத்தி அங்குள்ள பொருட்காட்சி சாலையை (Museum) யும் பார்த்துவிட்டு நாகப்பட்டணத்துக்குக் கடற்கரையின் வழியாகவே வந்தோம்.

சுமார் 12-15-க்கு மத்தியான சாப்பாடு சாப்பிட்டுவிட்டு உடனே 1 மணிக்கு நாகூருக்கு ட்ரெயின் மூலமாகச் சென்றோம். அங்கு நாகூர் ஆண்டவர் கோவிலைப் பார்த்துவிட்டு மோட்டாரில் காரைக்காலுக்குச் சென்றோம். அங்கு 9 மணி வரையில் கண்ணாடி வீடு (Glass house), கவர்னர் பங்களா ஆகியவை களைப் பார்த்துவிட்டு, இராச்சாப்பாடும் சாப்பிட்டுவிட்டு மறுபடி யும் காரைக்காலிலிருந்து நாகப்பட்டணத்துக்கு மோட்டாரில் வந்தோம். பிறகு அங்கிருந்து 4-15-க்கு ட்ரெயின் ஏறி 7-30-க் குத் தஞ்சாவூர் வந்து இறங்கினோம். பின் அங்கு காலைப் போஜனம் அருந்திவிட்டு ஞாயிறு கடன் பூசை கண்டபின், ப்ரஹதீஸ்வரர் கோவிலையும் பார்த்துவிட்டு 11 மணிக்கு வண்டி யேறி 12-50-க்கு திருச்சி ஜங்ஷன் வந்திறங்கி போர்டிங் உள்ளே வந்து மாதாவுக்கு நன்றிசெலுத்தினோம்.

"நூல் நூற்றல்"

J. Chinnappan

நாகரீகம், நாகரீகம் என்ற பெயரைக்கொண்டு நரகரீகம் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றது இந்த இருபதாம் நூற் றாண்டிலே. எனவே நாகரீக வாழ்க்கையுள்ள எத்திறத்தவர் களும் தமது உடம்பை மறைத்தற்கு ஆடைகளை வேண்டி நிற் கின்றனர். "ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" என்ற ஆன்றோர் மொழிப்படி மேலே துணியில்லாதவர் விலங்குகளி னும் தாழ்ந்தவராகக் கருதப்படுவர். மாந்தர் தமதறிவுகொண்டு ஆடைகளை நெய்து உடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

நம் முதியோர்கள் பொதுவாக கைத்தொழில்களையெல் லாம் மூன்று வகையாகப் பாகுபாடு செய்து வைத்திருக்கின் றனர். அவை உழவு, நெசவு, வாணிகம் என்பனவாம். இவற் றில் இடையிலுள்ள நெசவே ஏனைய இரண்டையும்விடச் சிறந்தது. ஏனென்றால் தீவினை ஒரு சிறிதுமில்லாத தொழில் நெய்தற்றொழிலேயாகும். இக்காரணம்பற்றியே தெய்வப் புலமை திருவள்ளுவநாயனார் உழவுத் தொழிலையே சிறப் பித்துக் கூறினாராயினும் தாம் நெய்தற்றொழிலையே செய்து கொண்டு உயிர் வாழ்ந்தனர். உழவு செய்யுங்கால் சிற்றுயிர் களில் சில மாளுதலின், அதில் சிறிது தீவினை உண்டென் றும், நெய்தற்றொழிலில் ஒருயிருக்குந் தீங்கின்மையின் அதில் சிறிதும் தீவினை இல்லையென்றும் அறிதல்வேண்டும்.

நிற்க, எல்லோரும் ஆடைகளை நெசவு செய்து உடுத்த இயலாது. நெசவு செய்யாமலே ஆடைகளைப் பெற சர்க்கார் சங்கம் நமக்கு ஒரு சிறந்த வசதியளித்திருக்கின்றது. அவ் வசதியே நூல் நூற்றலாகும். எவ்விதமாக நெசவு செய்யாது ஆடைகளைப் பெறுவது? என்பதுதான் கேள்வி. எவ்வாறெனில் பின்னால் கூறப்போகும்வண்ணம் நூல் நூற்று கதர் வஸ்திராலயங்களில் நாம் கொடுத்தால், நமது நூல் பெறுமான துணியை அவர்கள் நமக்குக் கொடுப்பார்கள். தற்காலத்தில் விவசாயத்தில் எவ்விதம் போதுமான ஊதியம் கிடைக்கிறதில்லையோ அதேபோல் ஆரம்ப ஆசான்களுக்கும் கிடைக்கும் ஊதியம் மிகக்குறைவு. மாரியில்லாப்பயிர் செழுமை குன்றுவதுபோல் உபத்தொழில்புரியாத ஆசிரியர்களின் செல்வப் பெருக்கும் குன்றிப்போகும். எனவே ஆசிரியர்கள் எல்லோரும் உபத்தொழில் புரியவேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் புலனாகின்றதன்றோ!

மேலும் ஆசிரியர் கையாடுவதற்குத் தகுந்த உபத்தொழில் நூல் நூற்றலேயாகும். எவ்வாறெனில் இத்தொழில் செய்வதால் ஆடைகள் அழுக்கடையா. தேகப்பிரயாசை ஏற்படா. கரும்பு தின்றவர்களுக்கன்றோ அதன் ருசி தெரியும். நூல் நூற்றலாகிய பூஞ்சோலையில், பஞ்சாலாகிய பஞ்சற்கீழ் பஞ்சு மெத்தையிலிருந்துகொண்டு, தன்னை மறந்து ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்துகிடக்கும் நூல் நூற்கும் நண்பர்களின் இன்பத்தை யாரே நுகரவல்லார்? நூல் மாளிகையில் புகுந்தாலன்றோ அவ்வின்பம் தெரியும்! ஆகையால் இதன் சிறப்பைக் காண விரும்புவோர் இத்தொழிலில் ஈடுபடக்கடவர்.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

4—10—1940. எம் பாடசாலை உல்லாசப் பிரயாணங்கள் :—எம் மாணவர்களிற் பலர் நாகபட்டணத்திற்கும், மற்றும் பலர் கரூருக்கும், எஞ்சிய சிலர் உள்ளூர் மலைக்கோட்டைக்கும் உல்லாசப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். நாகப்பட்டணம் உல்லாசப் பிரயாண விவரத்தை மற்றோரிடத்திற் காண்க.

21—10—40. எமது மாணவர்களுக்கு வெளிப்பாட சாலைகளில் போதனை பயிற்சி:—சென்ற மாதத்தில் நடை

பெற்றதுபோல், சமீபத்திலுள்ள பற்பல பாடசாலைகளில் வகுப்புகளை நடத்தி போதனா·பயிற்சி அடையும்பொருட்டு எம் மாணவர்கள், அணிவகுத்து அனுப்பப்பட்டனர்.

23—10—40. கல்வி வாரக்கொண்டாட்டம் :—திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கத்தின் (The Tirchy District Teachers' Guild) கல்வி வாரக்கொண்டாட்டங்களில் ஒன்று ஷை தேதியில் எமது பாடசாலையில் Rev. Watson M.A. (Manager, Bishop Heber Schools) தலைமையின்கீழ் கூடியது. அவ்வமயம் திருச்சி அர்ச். சூசையப்பர் கலாசாலை பேராசிரியர் திரு. ஹிருதயஸ்வாமி ரெட்டியார் M.A., B.L. அவர்கள், "முதியோர் கல்வியும், புத்தகசாலைகளும்" எனும் விஷயமாக அரியதோர் பிரசங்கம் புரிந்து அனைவரையும் அகமகிழ்வித்தனர்.

26—10—40. எம் பாடசாலைத் தினக்கொண்டாட்டங்கள் :—(School Day Celebrations.) (1) காலை 9 மணிக்கு எம் பாடசாலை "வாலிபச்சாரணரின் ஒப்புக்கொடுத்தல் சடங்கு" (Boys Scouts Investiture Ceremony) இப்பாடசாலைத் தலைமையாசிரியர் சங். A. லூர்துஸ்வாமி B.A.L.T. அவர்களால் நடத்தப்பட்டது. அவ்வமயம் எம் பாடசாலை ஆசிரியரும் சாரணத் தலைவருமாகும் (Scout-Master) திரு. A. D. மரியபிரகாசம் B.A.L.T. அவர்கள் விஜயம் செய்திருந்த சாரணத் தலைவர்களுக்கும் (Scout-Masters) வாலிபச்சாரணர்களுக்கும், ஏனைய கனவான்களுக்கும் ஷை சடங்கை நடத்தி வைத்த சங். தலைமையாசிரியரவர்களுக்கும், நன்றி பாராட்டி வந்தனோபசாரங்கள் கூற ஷை சடங்கு வெகு குதூகலத்துடன் இனிது முடிவெய்தியது. (2) 11 மணிக்கு எம் மாதிரிப்பாடசாலைச் சிறுவர்களுக்குச் சிற்றுண்டி தலைமையாசிரியரால் அளிக்கப்பட்டது. (3) மாலை $2\frac{1}{2}$ மணிக்கு தலைமையாசிரியருக்கு வரவேற்பு, **Greetings to Rev. Fr. A. Lourduswami, B.A., L.T., Head Master and Manager of the Institution.**

எமது அலங்கார சபா மண்டபத்தில் மானேஜர் ஸ்வாமி அவர்களை இப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் விசேஷ குதூகல ஆடம்பர ஆரவாரத்துடன் வரவேற்றுப் பல ஆடல் பாடல் நடனங்களோடு உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்துக் கண்டுகொள்ள, அன்னவரும் அன்புடன் அவற்றை அனைத்தும் ஏற்றுக்கொண்டு தக்க புத்திமதிகளைக்கூறி, தலைமையாசிரியருக்கும், ஆசிரியர்கட்கும், மாணவர்கட்கும், ஊடே இருந்துவரும் குடும்பவாஞ்சை (Family Spirit) என்றும் நீடித்திருக்குமாறு இறைவன் அருள்புரிவாராக என வாழ்த்தித்

தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தபின், பாடசாலை வாழ்த்துப்பாப் பாடப்பெற்று, ஷை கொண்டாட்டம் இனிது நிறைவேறியது. மாலை 5 மணிக்கு ஆசிரியர்களால், மானேஜர் ஸ்வாமியவர்களைக் கௌரவப்படுத்த சிற்றுண்டி வழங்கப்பட்டது.

28—10—40. (1) காலை 8 மணிக்கு பந்தய விளையாட்டுகள் (Athletic Sports) சங். P. J. திரவியம் ஸ்வாமி அவர்களது அக்கிராஸனத்தின்கீழ் வெகு உற்சாகத்துடன் நடைபெறலாயிற்று. (2) மாலை 4 மணிக்கு "சிற்றுண்டி" தலைமையாசிரியர் அவர்களால் ஆசிரியர்களின் பொருட்டு வழங்கப்பட்டது. (3) மாலை **5** மணிக்கு பரிசளிப்பு விழா (Prize Distribution) அவ்வமயம் திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) Sri C. Raghunathan B.A. L.T., T.D. (Lond.), M.R.S.T. அவர்கள் அக்கிராஸனம் வகித்தனர். சங். தலைமை ஆசிரியரவர்கள் இப்பாடசாலையின் வருடாந்திர ரிப்போர்ட்டை (Annual Report) வாசித்துக்கொடுக்க, கனம் அக்கிராஸனர், படிப்பிலும், நடத்தையிலும், பந்தய விளையாட்டுகளிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் "பரிசு" அளித்தபின்னர், பலத்த கரகோஷங்களுக்கிடையில், தற்போது இப்பாடசாலை சங். லூர்துஸ்வாமி அவர்களின் தலைமையின்கீழ் வெகு திறமையுடனும், நேர்மையுடனும் நடைபெற்று வருவதற்கு, அவரது அயராத உழைப்பும் சாதுரியமுமே முக்கிய காரணமாகுமென்றும், இன்னும் இப்பாடசாலையில் நிகழ்ந்துவரும் சகல இயக்கங்களைக் காணத் தாம் மிகவும் சந்தோஷிப்பதாகவும், ஷை பாடசாலை தினக்கொண்டாட்டத்தில் தாம் கலந்துகொள்ளும்படி நேர்ந்தமைக்குத் தாம் பெரிதும் கடமைப்பட்டிருப்பதாகவும், இறுதியாக இப்பாடசாலையின் திறமையைப்பற்றிப் புகழ்ந்து, தம் சொற்பொழிவை முடிக்க, சங். தலைமையாசிரியர் அன்னவர்க்கு வந்தனோபசாரம் கூறினர்.

பிறகு "பாடசாலை நாடகங்கள்" தொடங்கலாயின :—
(1) ஆங்கில நாடகம் (A Scene from Shakespeare.)
(2) தமிழ் நாடகம் "யான் ஒரு அரசனாய் இருந்தால்." ஷை நாடகங்கள் இரண்டும் வெகு விமரிசையுடன் அன்று ஆங்குக் குழுமியிருந்த பெருங்கூட்டத்தினர் "நேரம் போனது தெரியவில்லையே" என வியந்து கூறியபடி, இனிது நிறைவேறியதுடன் ஷை வைபவங்கள் நடைபெறலாயின.

"திருச்சினாப்பள்ளி ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்"

S. S. Srinivasa Aiyangar, *Secretary.*

முதல் இரண்டு சங்க சென்டர்களின் கூட்டம்

1940-ம் வருஷம் அக்டோபர்-மீ 12-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு திருச்சி கீழப்புலிவார்டு ரஸ்தாவில் திருச்சி ஜில்லா ஆசிரியர்களின் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் ஸ்ரீ E. V. கோபாலய்யர் B.A., L.T. அவர்கள் தலைமை வகித்தார்கள். தஞ்சாவூர் சென்டர் பிரைமரி பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ V. நடராஜய்யர் அவர்களால் தெய்வ வணக்கம் பாடப்பெற்று கூட்டம் தொடங்கிற்று. சென்ற மாதத்தின் கூட்டத்தின் நிகழ்ச்சிக்குறிப்பு முதல் சென்டர் காரியதரிசி ஆரியன் ஆரம்பப் பாடசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீ S. S. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்களால் படிக்கப்பட்டது.

திருச்சி தேசீய உயர்தர பாடசாலை கணித போதகாசிரியர் ஸ்ரீ P. S. கணேச சாஸ்திரியார் M.A., L.T. அவர்கள் பிரதம தொடக்கக்கணிதம் புதிய பாடத்திட்டத்திலுள்ள கணக்குச் சம்பந்தப்பட்ட அநுபவ சித்தமான வேலை 1 முதல் 5 வகுப்புகளுக்கு என்பதில், முதலில் கணிதம் ஏன் அவசியமென்றும், அதை எவ்வாறு போதிக்கவேண்டுமென்றும் தொடங்கி, முதல் வகுப்பில் எண்ணுதல் பாடம் கற்பிக்கும்போது 1 முதல் 10 வரை உள்ள எண்களுக்குரிய குறிகளை, உச்சரித்து எண்ணும் போது பாவம் (கருத்து) மனதில் பதிந்து இருக்கிறதா என்பதை கவனிக்கவேண்டும்; எண்களின் ஞாபகத்தையும் சங்கியைகளின் ஞாபகத்தையும் பொருள்களின் மூலமாய்க் குறிக்கலாம் என்பதை விவரித்து கற்பித்தல் வேண்டும்; பெரும்பாலும் எண்களை இடது பக்கத்திலிருந்து வலது கைப்பக்கமும் மேலிருந்து கீழுமாக எழுதக் கற்பிக்கவேண்டும். இந்தப் பழக்கத்தை முதல் வகுப்பிலேயே தொடங்கி பழக்கத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஆரம்பத்தில் கணிதத்தை வாய்மொழிப்பாடமாக நடத்தவேண்டும். பிறகு சுமார் ஒரு மாதத்திற்கு பிறகு எழுதத்தொடங்கவேண்டும். எழுதும் முறையைக் கவனிக்க கொட்டைகளை வைக்கச் செய்து அப்போது மாணுக்கர்கள் எழுதும் முறையைக் கவனிப்பது சுலபம். எண்ணும்போது குரூப் ஆக எண்ணவேண்டும். கூறுகட்டி காய்கனிகள் விற்பதைப்பற்றிச் சம்பாஷித்தல், விவரித்துப் போதித்தல், குச்சிக்கட்டுகளின் அவசியம். 1 முதல் 10-க்குள் கூட்

டல். பயிற்சி செய்வதற்கு வேண்டிய எளிய செயல்கள், குச்சிக்கட்டுகள், வஸ்துக்கள், எண்களை எழுதியுள்ள சித்திரத்தைக் காட்டி குறிக்கும் எண்களைக் குறித்துக்காட்டுவதிலும் பார்த்து எழுதுவதிலும் பொறுக்கி எடுக்கச்செய்வது மேலானது. முதல் வகுப்பில் அனுபவசித்த வேலையே மிகவும் முக்கியம் என எடுத்துக்கூறி, முடிவுரையில் கணிதம் போதிக்கும் ஆசிரியர்கள் அதற்குவேண்டிய உபகரணங்கள் திருஷ்டாந்தங்கள் மூலமாகக் கற்பித்து குழந்தைகளுக்கு சிறு பிராயத்திலேயே ஒரு அருவருப்பு ஏற்படாதபடி ஒரு உருசியை ஏற்படும்படி கணிதத்தைப் போதிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டு சொற்பொழிவை முடித்துக்கொண்டார்கள்.

பின்னர், E. R. உயர்தர பாடசாலை பேராசிரியர் ஸ்ரீமான் N. S. நரசிம்மய்யங்கார் அவர்கள் யுத்தமும் தற்காலக் கல்வியும் என்ற தலைப்பின் கீழ் "பெருவிலிருந்து சைனு வரையிலும்" சர்வதேச சங்கத்திற்குப்பிறகு சுமார் 30 யுத்தங்கள் நடந்திருக்கின்றன என்று தொடங்கி தற்போது நடைபெறும் நவீன யுத்தம் ஆகாயப்போர், விஷ வாயுக்கள் முதலிய பலவித முறைகளைப்பற்றிப் படங்கள் மூலமாக விவரித்துக் கூறினார்கள். பின்னர் தரை, தண்ணீர், ஆகாயம் என்ற மூவிடங்களிலும் தற்காலத்தில், கொடூரமாக நடக்கும் யுத்த முறைகளைப்பற்றி விவரித்து, நாகரீக உலகில் நடைபெறும் இக்கோர யுத்தத்தால் ஆங்குள்ள கல்வி முறை பழுதுபட்டிருக்கிறதென விளங்குகிறதென்றும் எனவே இனி எங்கும் கல்வி முறை கீழ்வருவது போல் சீர்திருத்தமடையவேண்டுமென்றும் கூறினார்கள். அதாவது :—

1. (a) நீதிமார்க்கக் கல்வி. (b) தயாளக் கல்வி.
2. தொழில்களைப்போற்றும் கல்வி.
3. ஆசையை அகற்றும் கல்வி.
4. ஸ்திரீகளைக் கண்ணியமாக நடத்தும் கல்வி. மனிதர்கள் தேசத்தைப் பரிபாலிப்பவர்கள். ஸ்திரீகள் சமூகத்தைப் பரிபாலிப்பவர்கள். மனிதன் முற்போக்கானவன். ஸ்திரீ தேச பரம்பரையைக் காப்பாற்றுபவள். ஸ்திரீயே யுத்தத்தில் சமாதான தேவதையாகும். ரணத்தை உண்டாக்குபவன் ஆண். ரணத்தைப் போக்கவல்லவள் ஸ்திரீ. உதாரணம் பிளாரின்ஸ் நைட்டிங்கேல் என்ற ஆங்கில மாது.

கலைகளைப்போற்றும் கல்வி, சித்திரம், சங்கீதம், சமாதானத்தை நிலைநாட்டும் கல்வி. கல்வியினுல் மானிட சமூகமே

ஒரு குடும்பம். கடவுளே பிதா, ஜாதிப் பிணுக்கு ஒழியவேண்டும், என்றும் உண்மைத் தத்துவத்தைக் கடைபிடிக்கவேண்டும். கடவுளின்மேல் பரிபூரண நம்பிக்கைவேண்டும். அவர் அறிவின்றி ஒரு அணுவும் அசையாது என்றும் கூறி சொற்பொழிவை முடித்தார்கள்.

தலைவர் முடிவுரையில் வந்தனோபசாரம் கூற, கூட்டம் கலைவுற்றது.

நடுவெழுத்தலங்காரம் விடை

M. Visuvasam, *S. 1.*

(கொத்து 31, மலர் 4, 117-ம் பக்கம் பார்க்க)

சீதமதி வதனமுறு திருமரியின் திருவருளால் செப்புகிறேன்
சினேகன் சேசடியானின் நடுவெழுத்தலங்காரம்
சீதமிகு காலமதில் விளக்கில் விழும் பூச்சியது 'ஈசல்' என்பர்
சலம்வற்ரு திதம்பயக்கும் இந்தியாவின் நதியது 'கங்கை' என்பர்
சாதனையாய் சிப்பாய்கள் கலகம்செய்த ஊரது 'வேலூர்' என்பர்
சோபிதமார் நவீனக்கல்வித் திட்டத்தின் அரும்பெயர் 'வர்தா' வாம்
அம்புவியில் மாந்தர்உண்ணுமோர் தானியமது 'கோதுமை' யாம்
அபரிமித மாக இன்னல் இழைத்திடும் பூச்சியது 'கொசுகு' ஆகும்
மாதிறங்கொள் மகாராட்டிர சிறந்தவொரு மன்னன் 'சிவாஜி' என்பர்
மலரதிலே மதுதனையே உண்டுவக்கும் பூச்சியது 'ஞிமிறு' என்பர்
சோதரர் கர்டோசா மனங்களிக்க நடுவெழுத்தைக் கூட்டிச் சேர்க்கின்
சுகிர்தமுறும் ஒருகல்விக் கழகமதின் தலைவர்
'சங். லூர்து சுவாமி' யாமே.

குறிப்பு :—இவ்விடை பகர்ந்த இதர மாணவர்கள்,

A. James Fernando *S. 1.*
A. Alphonse, *H. 1. A.*
K. Maria Selvam, *H. 1. A.*

புத்தக விளம்பரம்

SCHOOL NURSERY RHYMES

பால சங்கீத வாசகப் புத்தகம் :—புதிய பாடத்திட்டப் படி முதல் மூன்று வகுப்புகளுக்கு, எல்லாப் பாடங்களுக்கும் உதவியாக சுலப மொழிகளும் சாதாரண ராகங்களும் அமைக்கப்பட்ட சங்கீதப் புத்தகம்.

ஆசிரியர்கள் தம் இஷ்ட ராகங்களை இசைத்தும் கற்பிக்க உதவும்.

இதில் இரண்டாம் வகுப்புக்கு : கதைகளுக்கு அபிநயப் பாடல்களும், தினத்தொழில், காலைக்கடன், கடவுள் வணக்கம், ஸ்தானங்கள், அவைகளின் மதிப்பு, தாவரம், அவைகளின் பாகங்கள், சூரியன் சந்திரன் திசைகள் காலங்கள்; வாரம் நாட்கள் மாதங்கள், நீர் நிலைகள், பெற்றோர் குடும்ப விவரணையும், அழுக்கு, சுத்தம், வியாதி, இன்னும் பிள்ளைகளுக்கு அவசிய விஷயங்களைப் போதிக்கவேண்டியவைகளைப் பாடல் மூலமாயும் கற்பிக்க ஏற்றது.

பாடல்களுக்குத் தகுந்த ஸ்வரங்களும் அமைக்கப்பெற்றுள்ளது. அனேக பாடசாலைகளில் சங்கீத வாசகமாய் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

பாலர் புத்தகம் $4\frac{1}{2}$ அணா. மாதிரிக்காப்பி $2\frac{1}{2}$ அ. ஸ்டாம்புகள்.
ஆசிரியர் புத்தகம் $6\frac{1}{2}$ அணா. மாதிரிக்காப்பி $3\frac{1}{2}$ அ. ஸ்டாம்புகள்.

புத்தகம் கிடைக்குமிடம் :

தலைமை உபாத்தியாயர்,
R. C. போதனுமுறை பாடசாலை,
திருச்சினுப்பள்ளி.

A. ஞானதிக்கம்,
மியூஸிக் டீச்சர்,
தி சௌத் இண்டியன் மியூஸிக் ஸ்கூல், செயின்ட் தாமஸ் சர்ச் ரோட், உதகமண்டலம்.

182466
சென்னை-600 008

OUR EMPLOYMENT BUREAU

The following Managements are in need of Trained Teachers. Unemployed Teachers may send in their applications direct to the Managements concerned:

1. The Manager, Nammalwar H. E. School, Namakkal, Salem Dt.	*Sec. Trained Teachers.*
2. The Manager, Saraswathi Aided Ele. School, Nadakkapatti, Togamalai Post, Trichy Dt.	*H. E. Trained Teacher.*
3. The Parish Priest, St. Aloysius' Church, Kosavapatti, Madura Dt.	*Sec. Trained Teacher.*
4. The Manager, St. Joseph's H. E. School, Punnaikayal, (Via) Attoor, Tinnevelly Dt.	*H. E. Trained Teachers & Sec. Trained Teachers.*
5. The Manager, R. C. Aided School, Nanjur, Keeranur P. O., Pudukottah State.	*H. E. Trained Teacher (completed certificate holders only).*
6. The Manager, Tiruvengadu Vilas Ele. School, Rasipuram, Salem Dt.	*Sec. Trained Teachers.*
7. The Manager, Sri Krishna Vilas H. E. School, Kalangani, Puduchatram P. O., Salem Dt.	*Sec. Trained Teachers.*

சிறுவர்கள் அறிவுக்கதிர்

(ஸ்தாபிதம் 1935.)

நம் நாட்டு சிறுவர் எதிர்கால முன்னேற்றத்திற்கும் மேன்மைக்கும்
ஏற்றவிதமாய் இனிய கட்டுரைகளுடன் வெளிவரும்
சிறந்த மாதப் பத்திரிகை

வருட சந்தா தபாற்கூலியுடன் (உள்நாடு) 0–12–0
" " (வெளிநாடு) 1– 8–0

விலாசம்: பண்டிதர் K. J. வேதமுத்து, பத்திராதிபர்,
"சிறுவர் அறிவுக்கதிர்" ஆபிஸ், ஈரோடு S. I. Ry.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு உழைத்துவரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனும்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ்,
94, 95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ்.

THOMAS SPORTS

Pro: I. PONNIAH PILLAI]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

TRICHINOPOLY



OFFICIAL STOCKISTS FOR:

SLAZENGER'S Ltd.

LONDON.

The CHEAPEST HOUSE FOR:

Spalding Australian Dunlop American Fulcrum & Japan

TENNIS FRAMES

WE UNDERTAKE

RE-STRINGING REPAIRING
RE-SHAPING & REGLUEING

WE MANUFACTURE THE BEST & GUARANTEED

NETS, BADMINTON BALLS IN ANY COLOUR IN ANY WEIGHT

A TRIAL IS SOLICITED

Your best Selection may be made at our Show Room.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.